COMMERCIAL SPACE
FOR RENT@CHROMPET
PURUSHOTTAM NAGAR
1400 Sqft
GROUND FLOOR
SOUTH 40 - Ft.ROAD
EAST 30-Ft.ROAD
CORNER
SUITABLE FOR OFFICE,
TUITION CENTRE, MULTIPURPOSE
9940343582

# GST ROAD NEWS

TAMBARAM

Weekly News Paper

Email:gstroadnews@gmail.com www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:13 Issue -5 11 May 2025 - 17 May 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902

மூன்று வேளையும்
வீட்டு சாப்பாடு
♦ காலை / இரவு - டிபன்
♦ மதியம் - சாப்பாடு
பிராமின்ஸ் சமையல் (சைவம்)
அஜினோமோட்டோ, Food Color சேர்க்கப்படாமல்
நல்ல முறையில் தயார் செய்துதரப்படும்.
காஞ்சிபுரம் கோவில் இட்லி கிடைக்கும்
(Tuesday,Thursday)
முன்பதிவு செய்யவும்
7305789795

## அமெரிக்க அதிபர் முயற்சியால் போர் நிறுத்தம்



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட முதல் கடந்த மூன்று நாட்களாக பரபரப்பை ஏற்படுத்தி வந்தது.

இந்த சூழ்நிலையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இருதரப்பிலும் நேற்று இரவு முதல் பேச்சு வார்த்தை நடத்தினர் அதைத்தொடர்ந்து இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டன. உடனடியாக போர் நிறுத்தப்பட்டதாக இரு தரப்பும் அறிவித்தனர்.

## பிரம்மோற்சவ விழா

சிட்லபாக்கம் அண்ணா தெரு ஸ்ரீதிருவேங்கடமுடையான் கோவில் பிரம்மோற்சவ விழா நேற்று தொடங்கியது. 22 ஆம் தேதி வரை விழா நடைபெறுகிறது

இன்று முதல் தினசரி மாலை 5 மணிக்கு ஊஞ்சல் சேவையும் 7 மணிக்கு சுவாமி திருவீதி உலாவும் நடைபெறும் .17 ஆம் தேதி தேரோட்டம் நடைபெறும்.

பக்தர்கள் திரண்டு வந்து பெருமாளின் அருள் பெற்று செல்லுமாறு கோயில் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

COMMERCIAL SPACE FOR RENT
@ TAMBARAM SANATORIUM ON GST ROAD
(OPP RAMA ANJANEYAR TEMPLE)
1St FLOOR 3000 Sq.Ft.,
2nd FLOOR 3000 Sq.Ft.,
CCP LIFT, WITH POWER BACKUP
SUITABLE FOR OFFICE, BANK
HOSPITAL & MULTIPURPOSE
80562 44703

PAAVAYEE BUILDERS
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
PREMIUM FLATS FOR SALE
@ HASTHINAPURAM
3 BHK
✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Metro Water ✓ Video Door
No Water Logging
SITE ADDRESS : MC NAGAR 1ST MAIN ROAD, (OPP. TO SAI BABA TEMPLE), HASTHINAPURAM, CHITLAPAKKAM.
FLATS @ CHROMPET
GANAPATHIPURAM,RADHA NAGAR
600 Mts From 200 Ft Radial Road
2 BHK Ready To Occupy
Area: 955 Sqft Onwards
No Water Logging
✓ Lift ✓ CCP ✓ CCTV ✓ Metro Water ✓ Video Door
SITE ADDRESS : SELVARAJ STREET, GANAPATHIPURAM, CHROMPET,
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223

FLATS FOR SALE
@CHROMPET SARASWATHIPURAM
Nr. SUNSHINE SCHOOL, RELA HOSPITAL


READY TO MOVE
AVAILABLE
1-BHK-628 Sq.ft
2-BHK
903/968 Sq.ft
3-BHK
1200 Sq.ft
CCP / TWP /CMDA/ VASTU/ LIFT
SECURITY CAMERA / 24 HRS WATER FECELITY
HITECH PROPERTIES
Architect Builder
96001 76888

WE ARE PROUD TO ANNOUNCE THAT SCS HAS SECURED
100% RESULTS IN THE +2 RESULTS - 2025


KAVYA.R
588/600


SHAHANA.R
585/600


MOHAMED UMAR ALI
580/600


HEVARDHINI.R
575/600


DHIVYA SHREE.S
574/600


YUGESH.R
560/600


ABINAYA.P
536/600

CONGRATULATIONS
TO OUR
ACHIEVERS


S.C.S. MATRIC.HR. SEC. SCHOOL
#30 RAMACHANDRA ROAD, NEHRU NAGAR,
CHROMEPET, CHENNAI -6000 044
MOBILE: 7868001786 PH: 044-2223 5761


மாணவர்கள் 100 % அனைவரும் தேர்ச்சி



குரோம்பேட்டை S.C.S மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளியில் 2024 25 கல்வியாண்டில் மார்ச் மாதம் நடைபெற்ற பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களையும் பள்ளி தாளாளர் திரு.க்ருஷ் சந்தானம் அவர்கள் பாராட்டினார்.

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
KRISHNA NAGAR
(Nr.Hasthinapuram Bus Stand)
SRE KRISHNAA

AVAILABLE
3BHK 1287 Sq Ft
LAND OWNERS
(1 to 3 GROUNDS)
CONTACT FOR
JOINT VENTURES
OR
OUTRIGHT
PURCHASES...
24 Hrs
Power Backup*
OUR UP COMING NEW PROJECTS
2, 3,4 BHK FLATS
@CHROMPET BASHYAM NAGAR
Nr.ABIRAMI KALYANA MANDAPAM
@ CHROMPET PADMANABHA NAGAR
Nr.KARUMARI AMMAN TEMPLE
Specification
AUTOMATIC LIFT
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Sankar Constructions
98416 59929 / 98416 59930

# சித்ரா பௌர்ணமி கதை



இவ்வுலகின் பாவ புண்ணிய பலனை அறிய சிவபெருமான் பார்வதி தேவியின் மூலம் தங்கப்பலகை கொண்டு வரச் செய்து அதில் சித்திரம் அமைத்தார். இதனை கண்டு அதிசயித்த பார்வதி இந்த சித்திரத்தை பேச வைக்க சிவனிடம் வேண்டினார். சிவனும் மந்திர உபதேசம் செய்து அந்த சித்திரத்திற்கு பேசும் சக்தியை கொடுத்து சித்ரபுத்திரன் என்ற பெயரும் வைத்தார். இந்த சித்திர புத்திரன் சித்ரா பவுர்ணமி தினத்தில் அவதரித்தார்.

அண்ட சராசரங்களிலுள்ள முன்னாள் கணக்குகளையும், பிரம்மா விஷ்ணு முதலானவர் களுடைய பாவ புண்ணிய கணக்குகளையும் தினமும் தமக்குத் தெரிவிக்கும்படி உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன்படி சித்திர புத்திரனார் கயிலையிலிருந்து கொண்டு கணக்குகளை எழுதி வந்தார்.

ஒரு சமயம் தேவேந்திரன் தனக்கு மக்கட்பேறு வேண்டுமென்று தருமங்கள் பல புரிந்து இறைவனை நோக்கி இந்திராணியுடன் தவம் புரிந்தார். சிவபெருமான் காமதேனுவை அழைத்து, இந்திரன் இந்திராணி தவத்தை எடுத்துரைத்துப் பின்னர், சித்திரபுத்திரரை இந்திரனுக்குப் புத்திரனாகப் பிறந்து, அவன் கவலையை தீர்க்குமாறு அருள் புரிந்தருளினார்.

அங்ஙனமே சித்திரபுத்திரனார் காமதேனுவின் வயிற்றில் உதித்து பாவ புண்ணியங்களைப் பகுத்து வந்தார். இந்த சித்திரபுத்திர நாயனார் கதை சித்ரா பவுர்ணமி அன்று ஆலயங்களில் படிக்கப்பட்டு அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரைக் கதை, சித்திரைக் கஞ்சி எனவும் வழங்கப் படும்.

இந்த நோன்பை எல்லோரும் சிறப்பாக கொண்டாடுவர்கள் சித்திரை நட்சத்திரம், பௌர்ணமி தினத்தில் அல்லது ஒரு நாள் முன் பின்னாக வருவதால் அந்த மாதத்திற்கு சித்திரை மாதம் என்று பெயர். சித்திர குப்தனை வேண்டிக்கொண்டு பெரும்பாலும் பெண்களே விரதம் மேற்கொள்கின்றனர். சித்ரா பௌர்ணமி தினத்தில் சித்திர குப்தனைப்போல மாக் கோலம் போட்டு, ஏடு, எழுத்தாணி வைத்து விளக்கேற்றி பூஜை செய்து பொங்கலிட்டு வழிபடுவர்.

பாவங்களிலிருந்து விடுபடவும், நரகத்திற்கு போகாமலிருக்கவும் இந்த விரதம் மேற்கொள்கின்றனர். இந்த நாளில் மரணதேவனின் விசேஷ பிரதிநிதியான சித்ரகுப்த னுக்கு விசேஷ வழிபாடு செய்யப் படுகிறது. ஒவ்வொரு வருடமும் சித்ரா பவுர்ணமி தினத்தில் செய்யப்படும் இந்த பூஜையால் மேல் உலகில் உள்ள தேவர்கள் திருப்தியடைந்து மனிதர்களின் செயல்களை மிகுந்த பரிவுடன் தீர்மானிக்கிறார்கள்.

# விசாகம் நட்சத்திரத்தில் வரும் சித்ரா பௌர்ணமி



இந்த ஆண்டு கூடுதல் சிறப்பாக சித்ரா பவுர்ணமி, முருகப் பெருமானுக்குரிய விசாகம் நட்சத்திரத்துடன் இணைந்த வருகிறது. ஜோதிட சாஸ்திரப்படி, விசாகம் நட்சத்திரம் முருகப் பெருமான் அவதரித்த நட்சத்திரம் ஆகும். விசாகம் நட்சத்திரத்திற்குரிய அதிபதி குரு பகவான். இவர் மங்களங்கள் அனைத்தையும் அருளக்கூடியவர். அதுமட்டுமல்ல இந்த ஆண்டுசித்ரா பௌர்ணமி திங்கட்கிழமையில் வருகிறது. திங்கட்கிழமையில் திருவண்ணாமலையில் கிரிவலம் சென்றால் இந்திர பதவி கிடைக்கும். முற்பிறவி மட்டுமின்றி இந்த பிறவியிலும் செய்த பாவங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை. ஆரோக்கியம் சிறக்கும், நினைத்தது நடக்கும், வெற்றிகள் குவியும் என்பது நம்பிக்கை.

# சித்ரா பௌர்ணமி சிறப்புகள்



சித்ரா பவுர்ணமி நாளில் சித்ரகுப்தரை வழிபட்டால், அவர் நம்முடைய வழிபாட்டில் உள்ளம் மகிழ்ந்து, நம்முடைய பாவ கணக்குகளை குறைத்து, புண்ணிய கணக்குகளை அதிகரித்து எழுதுவார் என்பது மனிதர்களின் நம்பிக்கை. ஆனால் அவர் நேர்மையாக பாவபுண்ணிய கணக்குகளை எழுதிக் கூடியவர் ஆவார். சித்ரா பௌர்ணமி நாள் என்பது சித்ரகுப்தரின் பிறந்த நாள் என்றும், திருமண நாள் என்றும் சொல்லப்படுகிறது. இந்த நாளில் விரதம் இருந்து வழிபடுவது மிகப் பெரியபுண்ணியபலன்களைதரும் என்பது நம்பிக்கை. இது புதிய கணக்குகளை துவங்குவதற்கு ஏற்ற நாளாகவும் கருதப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சித்ரா பவுர்ணமி இந்த ஆண்டு மே 12ம் தேதி திங்கட்கிழமை வருகிறது.

# விநாயகரின் அறுபடை வீடுகள்!!!

முருகப்பெருமானுக்கு இருப்பது போல விநாயகருக்கும் அறுபடை வீடுகள் உள்ளது. அந்த அறு படை வீடுகளின் வழிபாடு பலன்கள் வருமாறு:

முதல்படை_வீடு :திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள விநாயகரின் பெயர் `அல்லல் போம் விநாயகர்'. இந்த விநாயகரைக் குறித்து போற்றப்படும் பாடலே `அல்லல் போம் வல்வினை போம், அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம்' என்பது. இவரை வழிபட அல்லல்கள் தீரும்.

இரண்டாம்_படைவீடு :விருத்தாசலம்

விருத்தாசலம் இங்குள்ள ஆலயத்தில் எழுந்தளியுள்ள கணபதிக்கு ஆழத்துப் பிள்ளையார் என்று பெயர். பெயருக்கேற்ப ஆழத்தில் சன்னதி கொண்டுள்ளார். இந்த விநாயகரைத் துதித்தால் செல்வமும், கல்வியும் மற்றும் சீரான வாழ்வும் நம்மை வந்து சேரும்.

மூன்றாவது_படைவீடு :திருக்கடவூர்

திருக்கடவூர் எந்தவிதமான வாழ்க்கை வசதிகள் நமக்கு அமையப் பெற்றிருந்தாலும் அதை அடைய நமக்கு மிக முக்கியத் தேவை நீண்ட ஆயுள். இந்த ஆயுளை அள்ளி வழங்குகிறவராக திருக்கடவூர் கள்ளவாரணப் பிள்ளையார் விளங்குகிறார்.

நான்காம்படை_வீடு :மதுரை

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள சித்தி விநாயகர் நான்காம்படை வீடு விநாயகராக கருதப்படு கிறார். மீனாட்சி அம்மன் சன்னதிக்குள் நுழையும் முன்னர் இவரின் தரிசனத்தைப் பெறலாம். நாம் விரும்புகின்றவாறு காரியங்களை நிறைவேற்றித் தருபவராக இவர் உள்ளார். மாணிக்கவாசகர் பாண்டிய மன்னருக்காக குதிரை வாங்கப் புறப்படுகையில் இந்த சித்தி விநாயகரையே தரிசித்துச் சென்றதாக திருவிளையாடல் புராணம் தெரிவிக்கிறது.



ஐந்தாவது_படைவீடு :பிள்ளையார்பட்டி

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஐந்தாம் படை வீட்டின் அதிபதியராகத் திகழ்கிறார். அனைத்துப் பேறுகளும் நம்மை வந்தடைந் தாலும் ஞானம் இல்லையேல் அந்தப் பேறுகளால் ஒரு பலனும் இல்லை. அந்த ஞானத்தை வழங்குபவராக இவர் அருள்பாலிக்கிறார். இவர் சிவலிங்கத்தைக் கையில் தாங்கி அருள்புரிகிறார். சிவ லிங்கத்தை கையில் ஏந்தி சிவ பூஜை செய்பவராகத் திகழும் இந்த கற்பக விநாயகரை வணங்கினால் தீட்சையும் ஞானமும் கிடைக் கும்.

ஆறாம்படை_வீடு :திருநாரையூர்

திருநாரையூரில் அருள் பாலிக்கிறார் பொள்ளாப் பிள்ளையார். அப்பரும் சம்பந்தரும் பாடிய இத்தலத்தில் இவரை வழிபட புதிய முயற்சிகளில் கை மேல் வெற்றி பலன் கிடைக்கும்.

ஆதிமுதல்வன் என்று போற்றப்படும் விநாயகப் பெருமானின் அற்புதத் தோற்றங்கள் பல. அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

விநாயகப் பெருமான் பல கோவில்களில் கருமை நிறத்தில் அருள்புரிந்தாலும், சில தலங்களில் வெண்மை, மஞ்சள், சிவப்பு, சந்தனம், பச்சை ஆகிய வண்ணங்களில் எழுந்தருளியுள்ளார்.

# மனிதனை வாட்டும் 5 விதமான தோஷங்கள்

ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் 5 விதமான தோஷங்கள் ஏற்படலாம் என்று ஆதி தமிழர்கள் கணித்து எழுதி வைத்துள்ளனர். ஒருவர் செய்யும் பாவங்கள், தவறுகள் எல்லாம் இந்த 5 வகை தோஷத்துக்குள் வந்து விடுகிறது. அந்த தோஷங்கள் 1. வஞ்சித தோஷம், 2. பந்த தோஷம், 3. கல்பித தோஷம் 4. வந்தூலக தோஷம் 5. ப்ரணகால தோஷம் எனப் படும்.1. வஞ்சித தோஷம் : பார்க்கக் கூடாத படங்கள், வெறியூட்டும் காட்சிகள், காம சிந்தனைகள் உடலில் சூட்டை உண்டாக்கி, அவை பித்த நாடிகளைப் பாதிக்கச் செய்கிறது. இது உடலில் பல வியாதிகளை உண்டாக்குகிறது. இதற்கு வஞ்சிததோஷம் எனப்பெயர். உடன் பிறந்த சகோதரிகளை வணங்கி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். சகோதரிகள் இல்லாதவர்கள் ஏழைப் பெண்களுக்குத் தானம் அளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வஞ்சித தோஷம் விலகிவிடும்.2. பந்த தோஷம் : நம்மை நம்பி பழகியவர்களுக்குத் துரோகம் செய்வது அல்லது பழிவாங்குதல் பந்த தோஷமாகும். இந்த தோஷத்துக்கு தந்தை, தாய் வழிகளில் உள்ள மாமா, அத்தை, சித்தப்பா, பெரியப்பா ஆகியோருடைய பெண்களுக்குத்தான தர்மங்கள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் பந்த தோஷம் விலகும்.3. கல்பித தோஷம் : பிறர் தன்னை விரும்புவதாக எண்ணிக் கொண்டு முறை தவறிப் பழகுதல் கல்பித தோஷமாகும். இத்தகைய தோஷம் ஏற்பட்டால் தன்னை விட வயதில் மூத்த பெண்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் கல்பித தோஷம் உடனடியாக விலகி விடும்.4. வந்தூலக தோஷம் : ஒருவர் தன்னைவிட வயது அதிகமுள்ள பெண்ணை திருமணம்செய்தால்,அவருக்கு சுவாசக் கோளாறுகள், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படலாம். இவ்வாறு உருவாகும் தோஷத்திற்கு வந்தூலகதோஷம் எனப்படும். வந்தூலக தோஷம் நீங்க வேண்டுமானால் வயதான தம்பதிகளுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும். வேஷ்டி, புடவை, துண்டு, ஆகியவற்றைத் தானமாக வழங்க வேண்டும். அறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்ச் சோலைத் தலத்திற்குச் சென்று முருகனைத் தரிசித்துப் பின் ஏழைத் தம்பதிகளுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும்.5. ப்ரணகால தோஷம் : திருமணப் பொருத்தங்கள் பார்க்காமல், பணம், புகழ், அந்தஸ்து, பதவி ஆகியவற்றுக்கு ஆசைப்பட்டு ஒருவர், திருமணம் செய்து கொண்டால், அவருக்கு ப்ரணகால தோஷம் ஏற்படும். இதனால் வாழ்க்கையில் பிடித்தம் இல்லாத நிலை காணப் படும். இந்த தோஷத்தை தவிர்க்க வேண்டுமானால் அனாதை விடுதியில் உள்ள பெண்களுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் ப்ரணகால தோஷங்கள் நிவர்த்தியாகும்.




# CLASSIFIEDS

## RENTAL

INDEPENDENT HOUSE TOLET@CHROMPET
NR. PURUSHOTHAMAN NAGAR, RADHA NAGAR MAIN RD
2 BHK - 600 Sqft
GROUND FLOOR, EAST FACING
BRAHMINS / PURE VEGETARIAN & FAMILY
24 HRS BORE / MUNICIPAL WATER
TWO WHEELER PARKING
SEP 3PH EB, INV WIRING
75501 51626

## BUILDING CONTRACT

IND.HOUSE PLAN
FLAT RENOVATION
EXPANSION
Modular Kitchen
SUMP & COMPOUND WALL
81 24 44 99 11

## FLAT RESALE

FLAT FOR RESALE @ANAGAPUTHUR LAKSHMI NAGAR
914 - Sqft UDS 417- Sqft
2-BHK CCP, 32 LAKHS
@CHROMPET Nr.RAILWAY STATION
800 Sqft
2-BHK CCP, 35 LAKHS
81249 79797

KR HOMES
Chromepet Ch-44
Home Construction @ 2250/- Sq.Ft.,
INCLUDING OHT & SEPTIC TANK SUMP, ELEVATION WORK
ARCHITECTURAL DESIGN
ENGINEER SUPERVISION
BRANDED MATERIALS
8072499969

FLAT FOR RESALE @ CHROMPET
Nr. RAILWAY STATION
2BHK GROUND FLOOR
E FACING 35L
9962003409

## PLOT SALE

PLOT FOR SALE @ POZHICHALUR
CMDA Approved Plots
87782 36300

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 2224 0607 / 89395 26999


# பாவங்களை விளக்கும் சித்ரகுப்தன்



சித்ரா பவுர்ணமி அன்று சித்ரகுப்தனின் படத்தை வீட்டின் பூஜை அறையில் வைத்து வழிபட் டாலும் சரி.. அல்லது காஞ்சீபுரத்தில் உள்ள சித்ரகுப்தனின் ஆலயத்திற்கு சென்று வழிபட்டாலும் சரி, நம்முடைய பாவக் கணக்குகள் நிவர்த்தியாகி விடும் என்பது நம்பிக்கை. மேலும் மறு பிறவி என்பதும் இருக்காது என்கிறார்கள். சித்ரா பவுர்ணமி தினத்தில் சிறு பிள்ளைகளுக்கு இனிப்பு கொடுத்து, ஆடை தானம் செய்வதுடன், புத்தகங் களையும் வழங்கினால், இந்தப் பிறவியில் நாம் செய்த தீமைகள் விலகும். விபத்துகளும், ஆபத்துகளும் நம்மை நெருங்காது.


## DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

GST ROAD NEWS
FOR ADVERTISMENT DETAILS CONTACT
89395 26999 / 044-22236399


# சித்ரா பௌர்ணமி வழிபாடு



சித்திரை மாதத்தில் வரும் பவுர்ணமியை சித்ரா பவுர்ணமியாக இந்துக்கள் கொண்டாடு கிறார்கள். மற்ற மாதங் களில் வரும் பவுர்ணமி நாட்கள் முருகன் மற்றும் சிவ பெருமானுக்குரிய வழிபாட்டு நாட்களாக கருதப்படுகின்றன. ஆனால் சித்திரைமாதத்தில்வரும்பவுர்ணமி மட்டும் பூலோகத்தில் வசிக்கும் ஜீவராசிகளின் பாவ, புண்ணிய கணக்குகளை எமலோகத்தில் இருந்து எழுதிக் கொண்டிருக்கும் சித்ரகுப்தருக்குரிய வழிபாட்டு நாளாககருதிவழிபடுவதுவழக்கம். இந்த நாளில் பாவங்களை போக்கி, முக்தியைஅளிக்கும்சிவபெருமான் குடிகொண்டிருக்கும் முக்தி தல மான திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வது மிகவும் விசேஷமானதாகும்.

# பாவங்கள்போக்கும் சித்ரா பௌர்ணமி



பவுர்ணமி என்றாலே அனைவரின் நினைவிற்கும் வருவது திருவண்ணாமலை கிரிவலம் தான். அனைத்து நாட்களிலும், வருடத்தின் அனைத்து பவுர்ணமியிலும் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வது சிறப் பானது என்றாலும், சித்திரை, ஐப்பசி, கார்த்திகை உள்ளிட்ட சில மாதங்களில் வரும் பவுர்ணமியில் கிரிவலம் வருவது பாவங்களை போக்கி, புண்ணியங்களை தருவதுடன், அளவில்லாத நலன்களையும் நமக்கு பெற்றுத் தரும். இந்த ஆண்டு மே 11ம் தேதி இரவு 08.48 மணி துவங்கி, மே 12ம் தேதி இரவ 10.44 வரை பௌர்ணமி திதி உள்ளது.

## இசை நிகழ்ச்சிக்கு கிடைத்த தொகையை ராணுவத்துக்கு வழங்கிய இளையராஜா

இசை அமைப்பாளர் இளையராஜா தனது இசை நிகழ்ச்சிகளுக்கு கிடைத்த தொகையை ராணுவ நீதிக்கு வழங்குவதாக கூறியுள்ளார் அவர் கூறியிருப்பதாவது

“என் நாடு மீது பெரு மிதம் கொண்ட ஒரு இந்தியனாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், என் இசை (Valiant) நிகழ்ச்சிகளில் கிடைத்த தொகையும், ஒரு மாத சம்பளமும் சேர்த்து, “தேசிய பாதுகாப்பு நிதிக்கு” (National Defence Fund) நன்கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளேன்.இந்த நன்கொடை என் “Valiant” இசைக்கு மட்டும் அல்ல நம் நாட்டின் வீரர்களின் வலிமைக்கும், தீவிரவாதத்தை ஒழிக்க அவர்கள் காணும் தியாகத்திற்கும் உரிய மரியாதை என்று இளையராஜா கூறியுள்ளார்

## வெண்டைக்காயின் மருத்துவ குணங்கள்



வெண்டைக்காயின் மருத்துவ குணங்கள் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

வெண்டைக்காயில் கார்போஹைட்ரேட், கொழுப்பு, புரதம், வைட்டமின் ஏ, வைட்டமின் சி, வைட்டமின் இ, வைட்டமின் கே, கால்சியம், இரும்புசத்துகள் உள்ளன. வெண்டைக்காயில் உள்ள அடங்கியுள்ள நீர்ச்சத்து, திரவ இழப்பை தடுத்து உடலை குளிர்ச்சியாக வைக்கிறது.

இரத்த சோகை, மூச்சிரைப்பு, கொலஸ்ட்ரால், மலச்சிக்கல், புற்றுநோய், நீரிழவு வயிற்றுப்புண், பார்வைக் குறைபாடு என அனைத்து நோய்களையும் தீர்க்கும் சிறந்த மருந்தாக வெண்டைக்காய் உள்ளது. இதிலுள்ள கரையும் நார்ச்சத்து கொல்ஸ்ட்ராலின் அளவைக் கட்டுப்படுவதால் இதய நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் மிகவும் குறைவு.

கர்ப்ப காலத்தில் வெண்டைக்காய் உட்கொள்வது நன்மை பயக்கும். ஃபோலேட் எனப்படும் ஊட்டச்சத்து வெண்டைக்காயில் காணப்படுகிறது, இது கருவில் உள்ள சிசுவின் மூளை வளர்ச்சியை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீரிழிவு நோயாளிகள் வெண்டைக்காய் ஊற வைத்த நீரை தினமும் பருகி வருவதன் மூலம், இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளலாம்.

வெண்டைக்காயில் உள்ள சில ஊட்டச்சத்துக்கள், சிறுநீரக கற்களை அகற்ற உதவுகின்றன. இதில் உள்ள பெக்டின் கொழுப்பைக் குறைக்க உதவுகிறது, அதே போல் அதில் காணப்படும் கரையக்கூடிய நார்ச்சத்து, இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் கட்டுப்படுத்துகிறது, இதனால் இதய நோய் அபாயம் குறைகிறது.

வெண்டைக்காயில் காணப்படும் பசையம் மற்றும் வைட்டமின் கே , நம் எலும்புகளுக்கு மிகவும்பயனுள்ளதாக இருக்கும். பிஞ்சு வெண்டைக்காயை வேகவைத்து எடுத்த நீருடன் சர்க்கரைச் சேர்த்துக் குடித்தால் இருமல், நீர்க்கடுப்பு, வெள்ளைப்படுதல் சரியாகும். வெண்டைக்காயைப் பச்சையாக மென்று சாப்பிட்டால் பற்கள் தூய்மை பெறுவதுடன் ஈறுகளில் ரத்த ஓட்டம் தூண்டப்படும். ஈறு தொடர்பான நோய்கள் சரியாகும்.

முற்றிய வெண்டைக்காய் மூன்று, ஒரு தக்காளி, பூண்டுப்பல் மூன்று, சின்ன வெங்காயம் இரண்டு, மிளகு ஐந்து, கால் டீஸ்பூன் சீரகம் சேர்த்து நீர் விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். பாதியாக வற்றியதும் அடுப்பிலிருந்து கீழே இறக்கி உப்பு சேர்த்துக் குடித்தால் சளித் தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெறலாம்.

## கோடை வெயிலில் இருந்து சருமத்தை பாதுகாக்க



ஒவ்வொரு பெண்ணும் ஒரு கவர்ச்சியான தோற்றத்தை கொடுக்க ஒப்பனை செய்ய விரும்புகிறார்கள். ஆனால் அதே நேரத்தில், பெண்கள் தங்கள் ஒப்பனை இயற்கையாக இருக்க விரும்புகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில், இது கோடையில் ஒரு கடினமான சவாலாக இருப்பதை நிரூபிக்கிறது. அத்தகைய சூழ்நிலையில், முதலில் உங்களுக்கு சரியான ஒப்பனை அடிப்படை தேவை, இதனால் ஒப்பனை சரியாக செய்ய முடியும் மற்றும் சரியான தோற்றத்தைக் காணலாம்.

**மேக்கப் தயாரிக்கும் முறை**

ஒப்பனை தளத்தை உருவாக்க உங்களுக்கு 3 விஷயங்கள், முதல் கற்றாழை ஜெல், இரண்டாவது அடித்தளம் மற்றும் மூன்றாவது சன்ஸ்கிரீன் லோஷன் தேவைப்படும்.

மூன்று விஷயங்களிலும் 22 சொட்டுகளை உங்கள் கையில் வைக்கவும்.

அவற்றை நன்றாக கலந்து, முகத்தில் தடவவும்.

முகத்துடன், கழுத்திலும் தடவவும், இதனால் உங்கள் முகத்தின் நிறம் கழுத்தில் இருந்து வித்தியாசமாகத் தெரியவில்லை. உங்களுக்கு இருண்ட வட்டம் இருந்தால், கண்களுக்குக் கீழே ஒரு சிறிய அடித்தளத்தைப் பயன்படுத்துங்கள். அடித்தளத்தைப் பயன்படுத்திய பிறகு, லேசான கைகளால் கலக்கவும். நீங்கள் விரும்பினால் இதற்குப் பிறகு ஒப்பனை பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் முகத்தில் இயற்கையான தோற்றத்தை நீங்கள் விரும்பினால், இது உங்களுக்கு போதுமானது.

**இயற்கை ஒப்பனை தளத்தின் நன்மை**

உங்களுக்குத் தெரியும், இந்த ஒப்பனைத் தளத்தில் கற்றாழை ஜெல் மற்றும் சன்ஸ்கிரீன் லோஷன் உள்ளது. எனவே இந்த தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் சூரியனில் சென்றால், உங்கள் முகம் சூரியனின் ஆபத்தான கதிர்களிடமிருந்து பாதுகாக்கப்படும். இதன் காரணமாக உங்கள் சருமம் கறுப்பாக மாறாது. அத்துடன் அஸ்திவாரத்தில் உள்ள ரசாயனங்கள் சருமத்திற்கு தீங்கு விளைவிக்காது.

## பாக். தாக்குதல் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம்

ஜம்மு காஷ்மீரில் இன்று காலை எல்லை தாண்டி பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிவாரணம் தரப்படும் என ஜம்மு காஷ்மீர் மாநில அரசு அறிவித்து உள்ளது.

## அமலுக்கு வந்த போர் நிறுத்தம்.

இந்தியா பாகிஸ்தான் சண்டை நிறுத்தம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அமலுக்கு வந்தது.

இரு தரப்பும் ஒருவரை ஒருவர் தாக்குவதில்லை என்று உறுதி செய்யப்பட்டது பாகிஸ்தான் தரப்பில் இருந்து தான் போர் நிறுத்தத்திற்கு முதலில் தூது வந்ததாகவும் அதை இந்தியா ஏற்றுக் கொண்டதாகவும் தெரிய வந்துள்ளது.

## நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடருக்கு பிரதமர் மோடி அழைப்பு.

பாகிஸ்தான் இந்தியா இரு நாடுகளும் எல்லையில் ராணுவ நடவடிக்கைகளை நிறுத்த சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.



குரோம்பேட்டை புருஷோத்தமன் நகர் ஸ்ரீ விஜய கணபதி லட்சுமி நாராயண பெருமாள் ஆலயத்தில் சனி பிரதோஷத்தை முன்னிட்டு சிவபெருமான் ரிஷப வாகனத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்த போது எடுத்த படம்.



## அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் 2 மாணவர்களுக்கு இலவச இடம்

நெல்லை தூத்துக்குடி நாடார் சங்கம் சார்பில் அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரி நடத்தப்படுகிறது இந்த கல்லூரியில் இரண்டு மாணவர்களுக்கு பி டெக் 4 ஆண்டுகள் இலவசமாக படிக்க இடம் தருமாறு சமூக ஆர்வலர் வேணுகோபால் கோரிக்கை விடுத்தார். அதை ஏற்று அந்த மாணவர்களுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக வேணுகோபால் நன்றி தெரிவித்தார்.

## வெண் பூசணியில் மோர்க் குழம்பு



**தேவையான பொருட்கள்:** பூசணிக்காய் 1/4 கிலோ, தேங்காய் துருவல் 3 ஸ்பூன், பச்சை மிளகாய்4, சீரகம் 1 ஸ்பூன், கடலைபருப்பு 1 ஸ்பூன், அரிசி1 ஸ்பூன், மோர்2 கப், மஞ்சள் தூள் 1/2 ஸ்பூன், கடுகு 1/2 ஸ்பூன், உளுந்தம்பருப்பு 1/2 ஸ்பூன், கருவேப்பிலை சிறிதளவு, மல்லிதழை சிறிதளவு, உப்பு தேவையான அளவு, எண்ணெய் தேவையான அளவு, பெருங்காயம் சிட்டிகை, மோர்மிளகாய் 2

**செய்முறை:** கடலைபருப்பு, அரிசி 2 மணிநேரம் இரண்டையும் ஒன்றாக ஊறவைத்து அரைத்து வைக்கவும். தேங்காய், பச்சைமிளகாய், சீரகம் நன்றாக அரைத்து கொள்ளவும். பூசணிக்காயை வேகவைத்து கொள்ளவும். பின் மோரில் பூசணிக்காய், அரைத்த மசாலா,மஞ்சள்தூள், உப்பு, தேவையான தண்ணீர் சேர்த்து தயார் செய்து வைக்கவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி பெருங்காயம், கடுகு, உளுந்தம்பருப்பு, கருவேப்பிலை, மோர்மிளகாய்,தாளித்து மோர்கரைசலை அதில் சேர்க்கவும். நன்கு நுரை கூடியதும் மல்லிதழை தூவி இறக்கவும்.

WANTED
@SANATORIUM
♦ SITE CIVIL ENGINEER EXP
AGE BELOW 30
94445 67836 /96000 41841

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.


PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

shikshaa
Matriculation Higher Secondary School
No.8, Ponniamman Kovil Street, Hasthinapuram, Chennai - 600064
Contact No. 044-45272506 / 45266825
Email: shikshaa@shikshaaschool.edu.in www.shikshaaschool.edu.in
The Management , Principal and Staff congratulate the
Toppers and Centum Holders of Std -XII in the Board Exams held in March 2024-25

RAJALAKSHMY.M
586 / 600

RITHIK KRISHNA.B
586 / 600
CENTUM IN FRENCH & COMMERCE

DEVADHARSHINI.R
584 / 600

MONISHA.B
564 / 600
CENTUM IN COMPUTER APPLICATION
CENT PERCENT RESULTS
63 %PASSED WITH DISTINCTION
93 % IN FIRST CLASS
Admissions are also Open for Classes Pre-KG to IX & XI
GROUPS OFFERED
Group I-A : Physics, Chemistry , Computer Application and Mathematics.
Group I-B : Physics, Chemistry, Biology and Mathematics.
Group III – A : Commerce, Accountancy, Economics and Computer Application.
Group III – B : Commerce, Accountancy, Economics and Business Maths.

## சித்ரா பௌர்ணமி கிரிவலம் செல்ல நல்ல நேரம்



சித்ரா பௌர்ணமி அன்று திருவண்ணாமலை கிரிவலம் செல்லும் பக்தர்களின் வசதிக்காக கிரிவலம் செல்வதற்கு ஏற்ற நேரத்தை அருணாச்சலேஸ்வரர் கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது. அதன்படி, கிரிவலம் செல்லும் பக்தர்கள், மே 11ம் தேதி இரவு 08.01 மணிக்கு துவங்கி, மே 12ம் தேதி இரவு 10.25 மணிக்குள் கிரிவலத்தை நிறைவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஞாயிற்றுக்கிழமை இரவு கிரிவலத்தை துவக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் திருவண்ணாமலையில் கிரிவலம் சென்றால் சிவனின் அருளும், சிவலோக பதவியும் கிடைக்கும் என்பார்கள்.

## உம் தேதி மீண்டும் இந்தியா பாகிஸ்தான் பேச்சு: மிஸ்ரி

வருகிற 12ம் தேதி இந்தியா பாகிஸ்தான் ராணுவ டைரக்டர் ஜெனரல்கள் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகிஸ்தான் ராணுவ டைரக்டர் ஜெனரல்கள் இன்று மதியம் 3 மணியளவில் இந்திய அதிகாரிகளுடன் பேசியதாகவும், அதில் நிலம், வான், கடலில் இன்று மாலை 5 மணி முதல் சண்டை நிறுத்தம் செய்ய முடிவெடுக்கப்பட்டதாகவும் கூறினர்



சென்னையில் ராணுவ வீரர்களுக்கு ஆதரவாக நடந்த பேரணியின் முடிவில் நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த ராணுவ வீரர்களின் உருவப்படங்களுக்கு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



அஸ்தினாபுரம் பஸ் நிலையம் எதிரில் அதிமுக அஸ்தினாபுரம் பகுதி கழகம் சார்பாக தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அ.கிருஷ்ணமூர்த்தி பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கிய போது எடுத்த படம் அருகில் அழகு என்ற ராஜேஷ் கண்ணா.

## முதலமைச்சருக்கு ஆளுநர் ரவி பாராட்டு!

இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக பிரமாண்டமான பொதுமக்கள் பேரணியை நடத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி நன்றி!

“நமது ஆயுதப் படைகளுடன் நமது தேசம் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் துணைநிற்பது, பயங்கரவாதத்தின் அனைத்து முனைகளையும் அழித்தொழித்து, தேசிய இறையாண்மையை பாதுகாப்பதற்கான நமது ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது”

ஆளுநர் ஆர்.என்.ரவி தன்னுடைய X தளத்தில் பதிவு



சிட்லபாக்கம் குடியிருப்போர் நல சங்கங்களின் நிர்வாகிகள் மா. பாலச்சந்திரன் மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன், முன்னாள் பேரூர் மன்ற உறுப்பினர் பா.பிரதாப் ஆகியோர் இணைந்து தாம்பரம் மாநகராட்சியின் ஆணையர் திரு.பாலச்சந்தர் அவர்களிடம் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான குடிநீரை தேக்கி வைப்பதற்கு சிட்லபாக்கம் ஏரியின் மேட்டுப்பகுதியில் கட்டப்பட்டு வரும் தரைதல நீர் சேமிப்பு தொட்டியை விரைந்து முடித்து அதன் வாயிலாக குடிநீரை சீராக விநியோகம் செய்வது குறித்தும், பச்சை மலையில் இருந்து வரக்கூடிய மழை நீரானது சிட்லபாக்கம் மற்றும் செம்பாக்கம் ஏரிகளை கழிவுநீர் கலக்காமல் சென்றடைய மழை நீர் ஓடைகளை சீரமைப்பது குறித்தும், சிட்லபாக்கம் ஏரியிலிருந்து முத்தாலம்மன் கோவில் குளத்திற்கு ஏரியின் நீர் செல்வதற்கு குழாய் அமைப்பதற்கும் மற்றும் கடந்த 2024 –25 நிதியாண்டில் புதிதாக அமல்படுத்தப்பட்டுள்ள சொத்து வரி மற்றும் தொழில் வரியின் சதவீதத்தை சிட்லபாக்கத்தில் நிலவி வரும் வாடகை மற்றும் வருமானத்திற்கு ஏற்றவாறு தற்போது உயர்த்தப்பட்டுள்ள வரியினை மறு பரிசீலனை செய்வது குறித்து ஆலோசித்து மனுக்கள் அளிக்கப்பட்டது.

## ‘தீவிரவாதத்துக்கு எதிராகவே யுத்தம்’ போர் நிறுத்தம் குறித்து பஹல்காமில் உயிரிழந்தவரின் மனைவி



கான்பூர்: இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டுள்ளது குறித்து, பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த ஷுபம் துவிவேதியின் மனைவி ஐஷன்யா துவிவேதி தனது கருத்தை பகிர்ந்துள்ளார். அதில், “இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் 9 தீவிரவாத தளங்கள் அழிக்கப்பட்ட பாணிக்கு நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தேசத்தின் பாதுகாப்புப்படை மற்றும் பிரதமர் மோடி மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. இந்தப் போராட்டம் தீவிரவாதத்துக்கு எதிரானது. தீவிரவாதத்தை ஒழிக்கவே இந்தப் போராட்டம் தொடங்கப்பட்டது.

தீவிரவாதம் உள்ள வரை, ஆபரேஷன் சிந்தூரின் நடவடிக்கை தொடரும் என நம்புகிறேன்” என ஐஷன்யா துவிவேதி தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்ரவரி மாதம் தான் ஷுபம் ஐஷன்யா மண வாழ்க்கையில் இணைந்தனர்.

FREE ENTRY
JESUS FOR ALL
JEYAM MINISTRIES
HEALING TO THE BROKENHEARTED
ORGANIZED BY : JEYAM MINISTRIES NO.254,VELACHERY MAIN ROAD,EAST TAMBARAM,CHENNAI-73
KIDZ CAMP
JUNGLE SAFARI
MAY 12-16 DAILY
MONDAY - FRIDAY FROM 9AM-1PM
DAILY FUN EVENTS
3D SHOWS
MAGIC SHOW
JUMPING BALLOON
PUPPET SHOW
SWIMMING POOL & MANY MORE...
FOR KIDZ AGED 3-16
VENUE :
ANNAI ARUL THIRUMANA MANDABAM,
VELACHERY MAIN ROAD,CAMP ROAD JUNCTION,
SELAIYUR,EAST TAMBARAM, CHENNAI -73
CONTACT :
7358 640 398
7358 640 399
7358 640 400

Newly Opened
SRI SASTHA MAHAL A/C
Bookings Open
The Group of Sankar Constructions
Fully Airconditioned Thirumana Maaligai
In Hasthinapuram, RP Road
- Main Hall capacity of 500 persons (Floating 1000 Persons)
- Dining hall capacity of 200 persons
- 14 A/C Rooms
- Modular Kitchen with store room and service lift for dining
- Passenger Lift capacity of 16 members
- CCTV Camera for whole building
- Vinayagar temple is within the premises
- The hall is fully equipped with stand by Generator
- Pooja items and Unjal available
- Ample car parking available for both four wheelers and two wheelers
- Valet Car Parking Available
No.32, Hariharan Towers, R.P.Road, Hasthinapuram, Chrompet - 44.
98416 59929 / 98416 59931 / 90030 10611

Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725